21.04.2026.

DVC.09/2025

ம.சா.1 ஷைனி த/பெ.மோகன்தாஸ்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். எனது தாய் வழி பாட்டனார் தேவசகாயத்தினுடைய தங்கை சம்பூரணம் என்பவரின் மகள்தான் 2ம் எதிர்மனுதாரர் என்றால் தூரத்து சொந்தம் என்று தெரியும் ஆனால் உறவுமுறை தெரியாது. நான் எதற்காக எதிர்மதனுதாரர்களுகககு எதிராக இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரர்கள் செய்த கொடுமைகளுக்காகவும், ஜீவனாம்சம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் எனக்கு எதிராக காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.எண்.309/2024ல் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் நான் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கில் எனது தரப்பில் எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிருரை நான் தாககல் செய்ததுதான் அது எ.ம.சா.ஆ.1 ஆகும்.

திருமணம் நடந்து அடுத்த மாதத்தில் நான் கருவுற்றேன் என்றால் சரிதான். கருவுற்றதை தெரிந்தவுடன் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 4வது மாதத்தில் அதிகபடியாக வாந்தி தொந்தரவு இருந்ததால் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று 20 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு மீண்டும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்துவிட்டேன். குழந்தை பிறந்த பிறகு எத்தனை மாதங்கள் கழித்து எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்தேன் என்றால் 9 மதங்கள் கழித்து வந்தேன். அதாவது குழந்தையின் முதல் பிறந்த தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரருக்கு எதிராக உத்திரமேரூர் காவல்நிலையத்தில் நகைகளை திரும்ப கேட்டு கொடுத்த புகாரின்பேரில்போலிசார் அழைத்து விசாரித்தனர் முடிவில் எதிர்மனுதாரர்கள் எனக்கு சேரவேண்டிய நகைகளில் 12 1/2 சவரண்நகைகள் மட்டும் கொடுத்தனர். 6 சவரன் நகைகள் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 5 சவரன் நகை கொடுக்கவேண்டியுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நகைகளுக்கான ஒப்பந்த பத்திரத்தின் நகல் நாங்கள் எழுதிக்கொண்டது என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும்.

நான் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக சேர்ந்து வாழ வழக்கு ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். நான் கொடுத்த அந்த புகார் நகல் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

நான் எதிர்மனுதாரருக்கு எதிராக உத்திரமேரூர் மகளிர் காவல் நிலையம், காஞ்சிபுரம் டி.எஸ்.பி மற்றும் எஸ்.பி ஆகிய இடங்களில் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரின் நகலை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் என்னிடம் உள்ளது. நானும் 1ம் எதிர்மனுதாரரும் கடைசியாக பிரிந்த தேதியான 02.08.2024ம் தேதிக்கு முன்பு மனுவில் கோரியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் அல்லது யாரிடமாவது சொல்லியுள்ளேனா என்றால் நான் கருவுற்றிருந்ததால் யாரிடமும் சொல்லவில்லை மற்றும் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

நான் இம்மனுவில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2, 3 எதிர்மனுதாரருக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நான் ஏற்கனவே காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தாக்கியதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதை நிரூபிக்கும் வகையில் மருத்துவ ஆவணங்கள் எதையும் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் என்னிடம் உள்ளது. திருமணத்திற்கு முன்பு நான் சென்னை பெருங்குடியில் தனியார் வங்கியில் பில்லிங் பிரிவில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான்.

நான் எனது மனுவில் திருமணத்திற்காக எதிர்மனுதாரர்களுக்கு ரூபாய் 3/- லட்சம் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளதை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுவில் 1ம் எதிர்மனுதாரருக்கு மீனா மற்றும் அவரது மகள் திவ்வியதர்சினி ஆகியோர்களுடன் தொடர்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளதற்கு நான் அந்த நபர்கள் மீதோ அல்லது 1ம் எதிர்மனுதாரர்மீதோ சட்டப்படியான நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளேனா என்றால் கொடுங்காலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுங்காலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தவிவரத்தினை எனது மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எனது திருமணத்திற்கும், சீமந்த விழாவிற்கும், குழந்தையின் பிறந்தநாள் விழாவிற்கு அலங்காரம் செய்தது நான் சொன்ன மீனா என்ற நபர்தான் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு திவ்வியதர்சினி என்ற பெண்ணுடன் தொடர்பு இருந்தது குறித்து எனது மனுவிலோ அல்லது நிரூபணவாக்கு மூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை ஆனால் என்னிடம் ஆதாரம் உள்ளது. உத்திரமேரூர் காவல் நிலையம், காஞ்சிபுரம் மகளிர் காவல் நிலையம், காஞ்சிபுரம் டி.எஸ.பி அலுவலகம் ஆகிய இடங்களில் நடந்த விசாரணையில் நான்தான் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்று எழுதி கொடுத்துவிட்டு நானும் எனது தகப்பனாரும் சென்றோம் என்றால் சரியல்ல.

12.01.2025ம் தேதி எனது பெயரில் இருந்த கார் மற்றும் துணிமணிகளை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்று சென்றேன் என்றால் சரிதான். எனது பெயரில் இருக்கும் கார் தவணை முறையில் தான் வாங்கப்பட்டது என்றால் திருமணத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கார் கேட்டதால் என் தகப்பனார் காருக்கு முன்பணமாக ரூ.5/- லட்சம் கொடுத்தார், அதில் 2/- லட்சம் மட்டும் முன்பணமாக கட்டி 1ம் எதிர்மனுதாரர் கார் எடுத்தார். 1ம் எதிர்மனுதாரர் 2ஆண்டுகள்தவணை செலுத்தினார். தற்போது அந்த காருக்கான தவணைகளை நான்தான் செலுத்தி வருகிறேன். மாத தவணை ரூ.10,800/- ஆகும். மேற்படி கார் வாங்க பணம் கொடுத்த விவரத்தினை எனது மனுவிலோ அல்லது எனது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரர்கள் குடும்ப வரதட்சணை மற்றும்கொடுமைகள் செய்திருந்தால் 02.08.2024ம் தேதிக்கு முன்பாக அதுகுறித்து யாரிடமாவது சொல்லியிருப்பேன் என்றாலும் அல்லது புகார் ஏதும் கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பதால்தான் குறைந்தபட்சம் எனது பெற்றோர்களிடமும் கூறவில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் அரசு ஆசிரியர் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் போக்குவரத்து துறையில் இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். எனக்கு குழந்தை பிறந்த பிறகு நானும் 1ம் எதிர்மனுதாரரும் அந்த வீட்டில் முதல் தளத்திற்கு தனி குடித்தனமாக சென்றோம் என்றால் குழந்தையை பார்த்துக்கொள்ள யாரும் இல்லாததால் நாங்கள் முதல்தளத்தில் இருந்துகொண்டு அங்கேயே அனைவருக்கும் சமைத்துகொடுத்தேன். நான் வழக்கிற்காக 2, 3 எதிர்மனுதாரர்களுக்கும் சேர்த்து சமையல் செய்து கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருமணத்திற்கு போடப்பட்ட 5 சவரன் தாலிசரடு தற்போது என்வசம்தான் உள்ளது என்றால் சரிதான். ஆகஸ்டு 2024ம் வருடம் எதிர்மனுதாரர் தரப்பில் லியோ ஆசிரியர், அந்தோனி, நல்லூர் ஆறுமுகம், ஜெயகாந்தா, கூடுவாஞ்சேரி அன்புமரியான், சகாயம் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு என்னிடம் சேர்ந்து வாழ பஞ்சாயத்து செய்தனர் என்றால் சரியல்ல, நாங்கள்தான் மேற்படி நபர்களை பஞ்சாயத்து பேச அழைத்துச்சென்றோம். அவ்வாறு நாங்கள் பஞ்சாயத்து பேச அழைத்துச்சென்ற விவரத்தினை எனது மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ, விவாகரத்து வழக்கில்தாக்கல் செய்த எதிருரையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எதிர்மனுதாரர்களிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி நான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் எதிர்மனுதாரருடன் உண்மையில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அதற்கான சட்ட நடவடிக்கையை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே கணவன் மனைவி உறவுக்கு இடையில் 2, 3 எதிர்மனுதாரர்கள் ஒருபோதும் தலையிடவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய சந்தேக குணத்தினால்தான ் எனக்கும ் 1ம் எதிர்மனுதாரருக்கும ் இடையேயான திருமண பந்தம ் மீளா முடியாத வகையில் உடைந்துவிட்டது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ள 103.2 கிராம் நகைகளை எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருந்து திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான், ஆனால் பாக்கி நகை உள்ளது. எனக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தரவேண்டிய பாக்கி நகைகள் எ.ம.சா.ஆ.2ல் மொத்தமாக 6 சவரன் மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் இவ்வாறு எழுதிகொடுத்தால்தான் இந்த நகைகளையாவது கொடுப்பேன் என்று சொன்னார்கள். மேற்படி விவரத்தினை எனது மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எதிர்மனுதாரர்களுக்கும் எங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவினை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் 1ம் எதிர்மனுதாரர்மீது சந்தேகப்பட்டு கொடுமை செய்தேன் என்றாலும், செறுப்பால் அடிக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. நான் எந்தவித நியாயமான காரணமும் இல்லாமல் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்துவாழ மறுத்துள்ளபோது அவர்களுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள ் எதுவும ் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால ் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிர்மனுதாராக்ள்எந்தவித கொடுமையும் உடல் அளவிலும் மனதளவிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் மனுபரிகாரங்கள் கிடைக்கத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 5 சவரன் நகைகள் மட்டும்தான் கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரியல்ல.

2, 3 எதிர்மனுதாரர்களின் சுய சம்பாதிய சொத்துக்களில் உரிமைகோர எனக்கு எந்தவித உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு குற்றச்சாட்டுகளை பொறுத்து எதுவும் நடக்கவில்லை என்பதால்தான் அதுகுறித்து எதுவும் விவாகரத்து வழக்கு எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால ் சரியல்ல. நான ் தாக்கல ் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யபடிவேண்டியவை என்றால் சரியல்ல.

//உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.